# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 28 வியாழக்கிழமை 14.09.2023 கதிர் 72


# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் விரைவில் வர்த்தமானியில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஊடகச் சந்திப்பில் தகவல்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கையில் வலியுறுத்து



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம், சர்வதேசத் தரங்களுக்கு ஏற்றவகையிலும் நாட்டின் தேசியப் பாதுகாப்பில் சமரசம் செய்யாமல் இருப்பதை உறுதிசெய்யும்படியாகவும் திருத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சமநிலையான சட்டமொன்றைக் கொண்டுவரும் நோக்கில் தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்பட்டதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் அலி சப்ரி இந்த விடயங்களைக் கூறியுள்ளார். குறித்த சட்டமூலம் எதிர்வரும் சில தினங்களில் வர்த்தமானியில் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

2 ➤

# துண்டிக்கப்பட்ட யாழ் சிறுமியின் கை கொழும்புக்கு அனுப்பி பரிசோதனை

## *யாழ். நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது*

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைத்துத் துண்டிக்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் கையை கொழும்புக்கு அனுப்பி மேலதிகப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிமன்றினால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு விசாரணைகள் முடிவடையவில்லை எனவும் அதற்குத் தமக்கு மேலதிகமாக 10 நாட்கள் தேவை எனவும் மன்றில் தெரிவித்தனர்.

அதையடுத்து, துண்டிக்கப்பட்ட கையின் பாகத்தை பொலிஸார் ஊடாக கொழும்புக்கு அனுப்பி மேலதிகப் 2 ➤

# யாழில் விடுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சிறுமி கொலை செய்யப்பட்டுள்ளதாக முதல் கட்டத் தகவல்



திருநெல்வேலிப் பகுதியில் விடுதியிலிருந்து 12 வயதுச் சிறுமி சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட சம்பவத்தில், பேத்தியின் எதிர்காலம் குறித்த கவலையில் பேத்திக்கு மருந்து ஊசியைச் செலுத்தி நானே கொலை செய்தேன். கொலை செய்த பின்னர் நானும் உயிரை மாய்த்துக்கொள்ள ஊசியைச் செலுத்திக்கொண்டேன், என அம்மம்மா பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நேற்று முன்தினம் சிறுமியொருவர் சடலமாகவும் மற்றொரு பெண் மயக்கமுற்ற நிலையிலும் இருந்தமை கண்டறியப்பட்டது.

அம்மம்மாவும் சிறுமியும் கடந்த 2 ➤

# இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிராக ஸ்ரீ சந்தோஷ் ஜாவை நியமித்தது இந்தியா



இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகராக ஸ்ரீ சந்தோஷ் ஜா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ சந்தோஷ் ஜா தற்போது பெல்ஜியத்திற்கான இந்தியத் தூதராகப் பணியாற்றி வருகின்றார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராகப் பணியாற்றிவரும் கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், ஸ்ரீ சந்தோஷ் ஜா இலங்கைக்கான உயர்ஸ்தானிகராக நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீ சந்தோஷ் ஜா விரைவில் தமது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (க)







மொண்டெனெக்ரோவில் நடைபெறும் 'சோம்பேறி குடிமகன்' பரிசுப் போட்டி 04

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு 21 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு 05

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியாகியது 06

குரங்குகளுக்கும் கருத்தடை 07

# இலங்கையின் முதல் மீளாய்வு வெற்றிபெற்றால் பொருளாதார மீட்சி, நம்பிக்கை அதிகரிக்கும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் எதிர்பார்ப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் முதலாவது மீளாய்வு நடவடிக்கை வெற்றிகரமாக முடிவடைந்தால், இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மை மீதான நம்பிக்கையை அது அதிகரிக்கும், என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

முதல் மீளாய்வு இன்று ஆரம்பமாவதாகவும் இரண்டாவது தவணையைப் பாதுகாப்பதற்கும் இலங்கையின் பொருளாதார மீட்சியில் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் இந்த மீளாய்வு ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வு வெற்றிகரமாக நிறைவடைந்தால் பொருளாதார மீட்சிக்கான வலுவான நிலையில் இலங்கை இருக்கும் என்பதோடு 2024 இல் வளர்ச்சிக்கான நம்பிக்கைக்குரிய பாதையை அமைப்பதற்கு ஏதுவாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் குழு இலங்கை மத்திய வங்கி, திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடனும் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது. (க)

## துண்டிக்கப்பட்ட யாழ்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதனைகளை மேற்கொண்டு, அது தொடர்பாக அறிக்கையை பெற மன்று உத்தரவிட்டது.

அத்தோடு, அடுத்த விசாரணையை எதிர்வரும் 23ஆம் திகதி எடுத்துக்கொள்வதாகவும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தையின் இடது கை, கடமையிலிருந்த தாதியின் கவனக் குறைவால் மணிக்கட்டுடன் அகற்றப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.


குறித்த சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம், சுகாதார அமைச்சு என்பன விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

சிறுமியின் பெற்றோரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (க,01)

## யாழில் விடுதியிலிருந்து சடலமாக்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

9ஆம் திகதி குறித்த விடுதிக்குச் சென்றுள்ளனர். சிறுமிக்கு உளச்சிக்கல்கள் உள்ளதாகவும், அதற்கு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெற வந்ததாகவும் விடுதியில் அம்மம்மா தகவல் வழங்கியுள்ளார்.


11.09.2023

மறுநாள் அவர் வெளியில் சென்று வந்தார். அதன் பின்னர் இருவரும் நீண்ட நேரமாக அறையை விட்டு வெளிவராத நிலையில் சந்தேகமடைந்த விடுதி நிர்வாகத்தினர் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பொலிஸார் விடுதி அறையின் கதவை உடைத்தபோது சிறுமி உயிரிழந்த நிலையிலும் அம்மம்மா மயக்கமுற்ற நிலையிலும் காணப்பட்டுள்ளார்.

சிறுமியின் அம்மம்மா யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். நேற்று மாலை கோப்பாய்ப் பொலிஸார் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

தனது பெயர் நாகபூசணி (வயது 55) எனவும் தான் ஒரு மருத்துவத் தாதியாகக் கடமையாற்றியவர் எனவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் தனது பேத்தியின் பெயர் பார்த்திமா ஹீமா (வயது 12) எனவும் தெரிவித்துள்ளார்.

அவரது வாக்குமூலத்தில், நான் மருத்துவத் தாதியாகப் பணியாற்றியுள்ளேன். எனது மகள் முஸ்லிம் இளைஞர் ஒருவரை காதலித்து திருமணம் செய்து அவர்களுக்கு பெண் பிள்ளை பிறந்த நிலையில், அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். அதன்போது, அவர்களது பிள்ளை என்னுடன் வளர்ந்து வந்தது.

சில காலத்தில் இருவரும் வெவ்வேறு திருமணம் செய்து, வாழச் சென்றுவிட்டனர். பேத்தி என்னுடன் வளர்த்து வந்தார். இந்த நிலையில், பேத்தியின் தகப்பன், என்னுடன் தனது பிள்ளையை அனுப்புங்கள், நான் வளர்க்கிறேன் எனக் கூறி எனது பேத்தியை அழைத்துச் சென்று விட்டார்.

பேத்தி என்னை விட்டு பிரிந்ததும், அவளின் பிரிவுத் துயரும், அவளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகுதோ? என்ற கவலையும் எனக்கு ஏற்பட்டது. அதனால், நான் சில மாதங்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகி இருந்தேன்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், திருகோணமலைக்குச் சென்று, எனது பேத்தியின் தந்தையிடம், பேத்தி சில நாட்கள் என்னுடன் இருக்கட்டும். வீட்டுக்குக் கூட்டிப் போய் சில நாட்களில் மீண்டும் அழைத்து வந்து விடுகிறேன், எனக் கூறி பேத்தியை அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்தேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் பேத்திக்கு மருத்துவம் செய்ய வந்துள்ளோம், எனக் கூறி அந்த மருத்துவ மனைக்கு அருகில் உள்ள தங்குமிடத்தில் அறையை வாடகைக்குப் பெற்றுத் தங்கியிருந்தோம்.

அப்போது, பேத்தியின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகுதோ? என்ற கவலையில், பேத்தியைக் கொலை செய்துவிட்டு, நானும் உயிரை மாய்த்துக்கொள்வோம்!, என முடிவெடுத்தேன்.

அறையில் பேத்தியை விட்டு விட்டு, அருகில் உள்ள மருந்தகத்திற்குச் சென்று தூக்க மாத்திரை உள்ளிட்ட மாத்திரைகளையும் ஊசியையும் (சிறிஞ்) வாங்கினேன். என்னிடம் மருத்துவத் தாதி என்பதற்கான அடையாள அட்டை இருந்தமையால், அதனைக் காட்டி மருந்துகளை வாங்கினேன்.

அறைக்கு வந்து பேத்திக்குத் தூக்க மாத்திரைகளைப் போடக் கொடுத்து, அவள் தூங்கிய பின்னர் மருந்துகளைக் கலந்து ஊசி மூலம் அவளின் உடலில் செலுத்தினேன்.

பின்னர் நானும் அதனை எனக்கும் செலுத்திக்கொண்டேன். ஊசி ஏற்றியதில் அவள் இறந்து விட்டாள், ஆனால், நான் காப்பாற்றப்பட்டு விட்டேன், எனத் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் உயிரிழந்த சிறுமியின் அம்மம்மாவை இன்றைய தினம் வியாழக்கிழமை பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை , "எங்கள் இறப்பிற்கு யாரும் காரணம் இல்லை. எங்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லவேண்டாம்" என சிறுமியின் பாட்டி பொலிஸாருக்கு எழுதிய கடிதமும் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க,01)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்


JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys
Aventura
Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI
Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி
Digital Media Partner
காலைக்கதிர்

# வட கொரியாவுடன் ராணுவ ஒத்துழைப்பு புடினின் அறிவிப்பினால் உலகில் பரபரப்பு



வட கொரியாவுடன் ராணுவ ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்குச் சென்றிருந்த வட கொரிய அதிபர் கிம் ஜோங்குடன் பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பிறகு நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

ரஷ்யாவுக்கும், வட கொரியாவுக்கும் இடையே ராணுவ ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் சில வரம்புகள் உள்ளன. இருந்தாலும், இப்போது உள்ள கட்டமைப்புகளைக் கொண்டே இரு நாடுகளுக்கும் இடையே ராணுவ ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகள் குறித்து கிம் ஜோங்கும் நானும் விவாதித்தோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, தனி ரயில் மூலம் தங்கள் நாட்டுக்கு வந்திருந்த வட கொரிய அதிபர் கிம் ஜோங்கை ரஷ்ய அதிபர் புடின், நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ரஷ்யாவின் அமூர் பிராந்தியத்தில் அமைந்துள்ள வாஸ்டோச்னி விண்வெளி ஆய்வு தளத்தில் கிம் ஜோங்கை புடின் சந்தித்தார்.

அப்போது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் 'நியாயமான' போருக்கு ஆதரவு தெரிவிப்பதாக கிம் ஜோங்-உன் அறிவித்தார்.

4 மணித்தியாலங்களுக்கு நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின்போது பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவின் முக்கியத்துவம் வாய்ந்த விண்வெளி ஆய்வுதளத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளமையானது, தங்களது விண்வெளித் திட்டங்களுக்கு ரஷ்யாவின் உதவியை கிம் ஜோங்-உன் நாடுவதை வெளிப்படுத்துவதாக மேற்கத்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அணு ஆயுதச் சோதனைகளை நடத்தியதன் மூலமும் ஐ.நா. தடையையும் மீறி நீண்ட தொலைவு பாய்ந்து செல்லும் பலிஸ்டிக் வகை ஏவுகணைகளை உருவாக்கி வருவதாலும் சர்வதேச அளவில் வட கொரியா நீண்டகாலமாகவே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்பை மீறி உக்ரைன் மீது படையெடுத்ததன் மூலம் ரஷ்யாவையும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் சர்வதேச அளவில் தனிமைப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இந்தச் சூழலில், இரு நாடுகளின் அதிபர்களான கிம் ஜோங்-உன்னும், விளாடிமிர் புடினும் நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஏற்கனவே, உக்ரைன் போரில் பயன்படுத்த வட காரியாவிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதற்காக ரஷ்யா பேச்சுவார்த்தை நடத்துவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

உக்ரைன் போர் காரணமாக மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நிலையில், ஒன்றரை ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரில் ரஷ்யாவின் ஆயுதக் கையிருப்பு வேகமாகக் குறைந்து வருகிறது.

அதனை ஈடு செய்வதற்காக, வட கொரியாவிடமிருந்து எறிகணைக் குண்டுகள், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் பொன்றவற்றைக் கொள்முதல் செய்ய ரஷ்யா விரும்புவதாகக் கூறப்படுகிறது.

இதற்காக, ஏற்கெனவே ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷோய்கு வட கொரியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டதாகவும், ரஷ்யாவுக்கு வரும் வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன்னுடன் இது தொடர்பாக அதிபர் விளாடிமிர் புடின் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் மேற்கத்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில், தன்னைச் சந்தித்து கிங் ஜோங்-உன் பேச்சுவார்த்தை நடத்தியதற்கு பிறகு, வட கொரியாவுடன் ராணுவ ஒத்துழைப்புக்கான வாய்ப்புள்ளதாக புடின் தற்போது அறிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

## லிபியாவில் அணை உடைந்து வெள்ளப் பெருக்கு 20,000 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அச்சம்



லிபியாவில் அணை உடைந்து வீடுகள் அடித்துச் செல்லப்பட்ட கடலில் இருந்து தொடர்ந்து சடலங்கள் கரையொதுங்கி வரும் நிலையில், இந்தப் பேரிடரில் 20,000 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதுவரை மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 5,100 ஐக் கடந்துள்ளதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இது குறித்து கிழக்குப் பிராந்திய அரசின் பொது விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அபு கிலூத் கூறும்போது, வாடி டெர்னா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை உடைந்து, அதிலிருந்த வெள்ள நீர் டெர்னா நகரையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மத்தியதரைக் கடலுக்குள் அடித்துச் சென்றது.

ஏற்கெனவே பாதிப்புப் பகுதியிலிருந்து ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில், அந்தக் கடலில் இருந்து தொடர்ந்து சடலங்கள் கரையொதுங்கி வருகின்றன, என்று குறிப்பிட்டார்.

ஏற்கெனவே, அணை உடைப்புக்குப் பிறகு 10,000 பேர் மாயமானதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை தற்போது 20 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், மாயமான அனைவரும் உயிரிழந்திருக்கலாம் எனவும் அல்-பய்தா மருத்துவ மையத்தின் இயக்குநர் அப்துல் ரஹீம் மாஸிக் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, பாதிக்கப்பட்ட பகுதிகள் பலவற்றில் சாலை இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதிக்கு மீட்புக் குழுவினரால் செல்ல முடியவில்லை எனவும் இதன் காரணமாக பாதிப்பு விவரங்கள் பற்றி முழுமையாகத் அறிய வரவில்லை என்றும் அதிகாரிகள் கூறினர்.

மத்தியதரைக் கடலையொட்டி அமைந்துள்ள வட ஆபிரிக்க நாடான லிபியாவின் கிழக்குப் பகுதியை அந்தக் கடலில் உருவான சக்திவாய்ந்த 'டானியல்' புயல் ஞாயிற்றுக்கிழமை இரவு மிகக் கடுமையாகத் தாக்கியது.

இதனால் பெய்த கனமழையில், அந்தப் பகுதியில் மலையிலிருந்து பாயும் வாடி டெர்னா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை மிகப் பெரிய சப்தத்துடன் வெடித்து உடைந்தது.

அதையடுத்து, அந்த அணையிலிருந்த வெள்ள நீர் டெர்னா நகரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்குள் பாய்ந்து, அங்கிருந்த வீடுகளை உடைத்து அவற்றின் இடிபாடுகளையும், வாகனங்கள் உள்ளிட்ட பிற பொருள்களையும் அருகிலுள்ள கடலுக்குள் அடித்துச் சென்றது.

சுமார் 90,000 பேர் வசித்து டெர்னா நகர மக்கள், இந்தப் பேரிடருக்குப் பிறகு 2 நாள்களாக அரசின் உதவியின்றி தனித்து விடப்பட்டதாகத் தெரிவித்தனர். இந்தச் சூழலில், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளுக்கு கிழக்குப் பிராந்திய அரசின் அதிகாரிகள் மற்றும் மீட்புக் குழுவினர் செவ்வாய்க்கிழமைதான் சென்றடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் மீட்புக் குழுவினருடன் கிழக்குப் பிராந்திய அரசுப் படைகள், அரசுப் பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து, கட்டட இடிபாடுகளில் இருந்து சடலங்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

லிபியாவில் சர்வாதிகார ஆட்சி செலுத்தி வந்த கடாபியின் ஆட்சியை நேட்டோவின் ஆதரவுடன் கிளர்ச்சியாளர்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு கவிழ்த்தனர்.

அதன் பிறகு பல்வேறு ஆயுதக் குழுக்கள் மோதிக் கொண்ட அந்த நாட்டின் மேற்குப் பகுதியில் திரிபாலியைத் தலைநகராகக் கொண்ட ஓர் அரசும், அதற்குப் போட்டியாக கிழக்கே மற்றோர் அரசும் நடைபெற்று வருகின்றன.

அங்கு 10 ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்று வரும் மோதல்கள் மற்றும் குழப்பம் காரணமாக, நாட்டின் உள்கட்டமைப்பை பராமரிக்க முடியாமல் போனதால்தான் வாடி டெர்னா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை தற்போது உடைந்து ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர். (04)

## மொண்டெனெக்ரோவில் நடைபெறும் 'சோம்பேறி குடிமகன்'பரிசுப் போட்டி



ஐரோப்பாவில் உள்ள மொண்டெனெக்ரோ நாட்டில் நடைபெற்று வரும் 'சோம்பேறி குடிமகன்' போட்டியில் பங்கேற்றுள்ள போட்டியாளர்கள் 26 நாள்களாக மெத்தையிலேயே படுத்துள்ளனர்.

மொண்டெனெக்ரோ நாட்டில் உள்ள பிரெஸ்னா கிராமத்தில் 'சோம்பேறி குடிமகன்' போட்டி கடந்த மாதம் தொடங்கியது. மொத்தம் 21 பேர் இந்தப் போட்டியில் போட்டியாளர்களாக கலந்து கொண்டனர்.

சுமார் 26 நாள்கள் 463 மணிநேரம் கடந்துள்ள நிலையில், தற்போது 7 பேர் விடாமுயற்சியுடன் போட்டியில் நீடித்து வருகின்றனர்.

இந்தப் போட்டியைப் பொறுத்தவரை 24 மணிநேரமும் மெத்தையிலேயே படுத்திருக்க வேண்டும். உட்காரவோ, நிற்கவோ அனுமதி இல்லை. தவறுதலாகப் படுக்கையில் இருந்து எழுந்தால்கூட உடனடியாக போட்டியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை 10 நிமிடங்கள் கழிப்பறை செல்ல அனுமதி அளிக்கப்படுகிறது. மற்றபடி உணவு உண்பதெல்லாம் படுத்துக்கொண்டுதான். படுத்துக்கொண்டே கைப்பேசி மற்றும் லப்டொப் உபயோகிக்கவும், புத்தகங்கள் படிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கடைசி வரை படுத்து வெற்றி பெறுபவருக்கு 'சோம்பேறி குடிமகன்' என்ற விருதுடன் ஆயிரம் டொலர் பரிசுத் தொகையும் வழங்கப்படவுள்ளது.

படுக்கையில் உள்ள போட்டியாளர்களின் உடல்நிலையும் தொடர்ந்து மருத்துவக் குழுவால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

கடந்தாண்டு நடைபெற்ற இந்தப் போட்டி 117 மணிநேரத்தில் முடிவுக்கு வந்த நிலையில், இந்தாண்டு இன்னும் 7 பேர் போட்டியில் தாக்குப்பிடித்துள்ளனர். (04)

# மதுபானச் சாலையை அகற்றுமாறு கோரி யாழ். உடுப்பிட்டியில் மக்கள் போராட்டம்




யாழ்ப்பாணம் - உடுப்பிட்டிச் சந்தியில் புதிதாக அமைக்கப்படுகின்ற மதுபானச்சாலையை அகற்றுமாறு கோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பிரதேச மக்களின் ஏற்பாட்டில் உடுப்பிட்டி சந்தியில் இன்று காலை இந்தப் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

மதுபானசாலை அமைந்துள்ள குறித்த பகுதியில் பாடசாலைகள், ஆலயம் என்பன இருப்பதனால் இந்த மதுபானசாலை அகற்றப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு, சில தினங்களுக்குள் மதுபானசாலை அகற் றப்படாவிட்டால் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்தனர்.

போராட்டம் தொடர்பான மகஜர் வடக்கு மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க, 01)

## சட்டவிரோதமாகக் கசிப்புக் காய்ச்சியோரை பிடிக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள்

## அவர்களில் ஒருவரைக் காணவில்லையாம்!



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் அமைந்துள்ள புது ஐயங்குளத்தில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல்கிடைத்துள்ளது.


அதற்கு அமைய இன்றைய தினம் காலை 6.30 அளவில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலிருந்து 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அங்கு சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.



அவர்களைத் துரத்திச் சென்ற பொலிசார் மீண்டும் 8.30 மணி அளவில் திரும்பிய போது, இரண்டு பொலிசாரே அவ்விடத்தில் ஒன்று சேர்ந்துள்ளனர். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் திரும்பவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி மற்றும் உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய பொலிசார் மற்றும் இராணுவத்தினர் மோப்ப நாய் உதவியுடன் குளத்தின் கால்வாய் மற்றும் காடு போன்ற பகுதிகளில் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வடமராட்சி வல்லிபுரம் ஆழ்வார் கோயில் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுரம் ஆழ்வார் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 8.45 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது.

தொடர்ந்து 16 நாட்கள் இடம் பெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெண்ணைத் திருவிழாவும், 23ஆம் திகதி சனிக்கிழமை துகில் திருவிழாவும், 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாம்புத் திருவிழாவும், 25ஆம் திகதி திங்கட்கிழமை கம்சன் போர்த் திருவிழாவும், 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், 27ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 28ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திரத் தீர்த்த திருவிழாவும், 30ஆம் திகதி சனிக்கிழமை கேணித்தீர்த்தமும் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது. (01)

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு 21 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு

இலங்கை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

போலியான இலக்கத் தகடு பொருத்தப்பட்ட வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் காலி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதியமைச்சருமான நிஷாந்த முத்துஹெட்டிகமவை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி பிரதான நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஊழல் பிரிவின் பணிப்பாளருக்கு அழைப்பாணை அனுப்பவும் நீதிவான் உத்தர விட்டுள்ளார். (04)

# கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குச் செல்லும் வீதிக்கான காணி இராணுவத்தால் விடுவிப்பு



கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குச் செல்லும் வீதிக்கான காணி இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வந்தது.

இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள பொதுக் காணிகள், மக்களின் காணிகளை விடுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறித்த காணி, பாடசாலைப் பயன்பாட்டுக்காக இன்றைய தினம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கையளிப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாண இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுஜீவ கெட்டியாராச்சி கலந்துகொண்டு காணியைக் கையளித்தார்.

யாழ்ப்பாண இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுஜீவ கெட்டியாராச்சி, காணி விடுவிப்பு ஆவணத்தை அரசாங்க அதிபரிடம் கையளித்தார். குறித்த ஆவணம் அரசாங்க அதிபரினால் பிரதேச செயலாளரிடம் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் பி.ஜெயகரன், 55 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெயவர்தன, மத்திய கல்லூரி முதல்வர், இராணுவ உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைந்துள்ள யுத்த வெற்றி நினைவுத் தூபிக்குப் பின்பகுதியில் அமைந்துள்ள காணியே இன்று கையளிக்கப்பட்டது. (02)

# ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் திரைப்படமும் கண்காட்சியும்



(எம்.எப்.நவாஸ்)

ஐரோப்பிய ஒன்றிய நிதிப் பங்களிப்புடன் ஜேர்மன் சர்வதேச ஆய்வு மன்ற நிறுவனத்துடன் இலங்கை நீதி அமைச்சும் இணைந்துஏற்பாடு செய்துள்ள, 73 ஆண்டுகளுக்கு முன்னும் பின்னும் உள்ள வரலாற்றினைப் பின்னணியாகக் கொண்ட திரைப்படத் திரையிடலும், தமிழ் முஸ்லிம் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துமுகமான கண்காட்சியும் இடம்பெறுகின்றன.

மூன்று நாட்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு, நேற்று ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# கடுங்காற்றில் வேப்ப மரம் முறிந்து சம்மாந்துறைப் பாடசாலை சேதம்!

(வி.ரி.சகாதேவராஜா)

நேற்று புதன்கிழமை மாலை வீசிய கடும் காற்றில் பாரிய வேப்ப மரம் ஒன்று முறிந்து விழுந்து சம்மாந்துறை அல்மதினா வித்தியாலயம் சேதமடைந்துள்ளது.

இந்த வேப்ப மரம், பாடசாலை வகுப்பறைக் கட்டடத்தின் மீது விழுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்று பாடசாலை அதிபர் ஜனாபா .எம்.டி.சரீனா தெரிவித்தார் .

இன்று காலை அப்பாடசாலையின் இணைப்பாளர் எ.சிராஜ்தீன் அங்கு சென்று பார்வையிட்ட பொழுது, குறித்த கட்டடத்துக்கு பெரிய சேதம் ஏற்பட்டு இருப்பதை அவதானித்துள்ளார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானாவிற்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

இணைப்பாளர் சிராஜ்தீன் உடனடியாக சம்பந்தப்பட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கும், பொலிசாருக்கும், பிரதேச செயலாளருக்கும் அறிவித்தார். அதன் பிற்பாடு



அந்த மரங்கள் அகற்றப்பட்டன.

சுமார் 100 பிள்ளைகள் இருந்து கற்கும் வகுப்பறைகள் இந்த அனர்த்தத்தில் சேதமடைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியாகியது




2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி முதல் டிசெம்பர் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. (04)




# நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இரத்தான முகாம் நடைபெறுகிறது!



# பேராசிரியர் மௌனகுரு முன்னிலையில் சுவாமிகளின் திருவுருவப்பட பிரசுரம் வெளியீடு



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்மௌனகுரு முன்னிலையில் சுவாமிகளின் திருவுருவப்பட பிரசுரம் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இலங்கை ராமகிருஷ்ண மிஷினின் மட்டக்களப்பு மாவட்ட கிளை பிரசுரித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவப் படமும் மட்டக்களப்பு இகிமிசனின் முன்னாள்பொது முகாமையாளர்ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தா ஜீ மகராஜின் திருவுருவப்படமும் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் இப்பிரசுரங்களை வெளியிட்டு வைத்தார்.

காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்ற ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா மற்றும் முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறில் ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டது.




## முன்னாள் விரிவுரையாளரின் நூற்றாண்டு கால சிறப்புரை



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒன்று கூடல் நிகழ்வின் சிறப்புரை தொடர் நிகழ்வு இன்று காலை 8.30 க்கு கலாசாலையின் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கல்வி அமைச்சு அதிகாரியும் சட்டத்தரணியுமாகிய கோதை நகுலராஜா, ஆசிரியத்துவத்தின் பெருமை என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையை விரிவுரையாளர் சிவலோஜனி சுரேந்திரனும் நிறைவுரையை பிரதி அதிபர் த. கோபாலகிருஷ்ணனும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில், முன்னாள் விரிவுரையாளர் கோதை நகுலராஜா கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

## குரங்குகளுக்கும் கருத்தடை யோசனை சமர்ப்பிக்கப்படுமாம்!



நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் குரங்குகளின் தொல்லைக்குத் தீர்வாக, அவற்றுக்குக் கருத் தடை செய்யும் வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான யோசனையொன்று அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இரா ஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தலெல ஓவிலிகந்த மகுலேமட விவசாயிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது, இந்த அச்சுறுத்தல் குறித்து வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் கால்நடை வளங்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படும் என்றும், இந்த வேலைத்திட்டம் துரிதப்படுத்தப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ரெ-14)





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2023இல் வெளியிடப்பெற்றது.